15 06 2026 MONDAY 6 30 PM

வணக்கம்-மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மேற்காசிய பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில், அமெரிக்கா - ஈரான் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- நாட்டின் பொருளாதாரம் வலுவாக உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- காலை உணவு திட்டம், 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு விரிவாக்கம் செய்யப்படுவதாக முதலமைச்சர் திரு. விஜய் அறிவித்துள்ளார்.

- கும்மிடிப்பூண்டி பாலியல் வன்கொடுமை சம்பவம் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

- உலக கோப்பை குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் Poonam காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

மேற்காசிய பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில், அமெரிக்கா - ஈரான் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்த பிரச்சினை உலக அளவில் பொருளாதார பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஒப்பந்தம் செயல்பாட்டிற்கு வரும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ள திரு. நரேந்திர மோடி, இதன்மூலம் மேற்காசியாவில் அமைதி திரும்ப வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகவும் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

நடுத்தர வர்க்கத்தினரின் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனை தெரிவித்துள்ள அவர், வரிச் சலுகைகள் அறிவிக்கப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ், ஒரு கோடிக்கும் மேற்பட்ட வீடுகள் கட்டப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உடான் திட்டம், நடுத்தர வர்க்கத்தினரின் விமானப் பயண கனவை நனவாக்கியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேபோல், வந்தேபாரத், நமோ பாரத் போன்ற ரயில் சேவைகளும் நடுத்தர வர்க்கத்தினரின் நலனை கருத்தில் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் திரு. அமித் ஷா அதில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

நாட்டின் பொருளாதாரம் வலுவாக உள்ளதாக மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதுதொடர்பாக அவர் எழுதியுள்ள கட்டுரையில், சர்வதேச தரத்திற்கு இணையாக கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டிருப்பதாக கூறினார்.

பெண்கள் அனைத்து துறைகளிலும் முத்திரை பதித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

81 கோடிக்கும் மேற்பட்டோருக்கு இலவச உணவு தானியங்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

உலகின் மிகப் பெரிய சுகாதார காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், 12 கோடி குடும்பங்களுக்கு 5 லட்சம் ரூபாய் வரை இலவச மருத்துவ சிகிச்சை உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மத்திய அரசின் இந்த சாதனைகள் தொடரும் என்றும் திரு. பியூஷ் கோயல் அந்த கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

காலை உணவு திட்டம், 6-முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு விரிவாக்கம் செய்யப்படும் என்று முதலமைச்சர் திரு. விஜய் அறிவித்துள்ளார்.

இன்று சென்னையில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்ட பின்னர் இதற்கான அறிவிப்பை அவர் வெளியிட்டுள்ளார்.

முதல்கட்டமாக செப்டம்பர் 17ஆம் தேதி முதல் இந்த திட்டத்தை தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>><<<<<<

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி அருகே 3 வயது குழந்தை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், சிங்கப்பெண் படை அமைக்கப்பட்ட பின்னரும், பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவகாரத்தில், காவல்துறை உண்மையான குற்றவாளிகளை கண்டுபிடித்து, கடுமையான தண்டனையை பெற்றுத்தர வேண்டும் என்றும் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலினும் இதே கோரிக்கையை விடுத்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், குழந்தைகள், பெண்கள் பாதுகாப்பில் முதலமைச்சர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமியும் இந்த சம்பவம் குறித்து அதிர்ச்சி வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த கொலை வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகள் அனைவரையும் உடனடியாக கைது செய்ய த.வெ.க. அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

விளம்பர அரசியலை நிறுத்திவிட்டு, சட்டம் ஒழுங்கை காக்க உறுதியான நடவடிக்கைகளை முதலமைச்சர் மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி அந்த அறிக்கையில் கோரியுள்ளார்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதற்கு இந்த சம்பவமே சாட்சி என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இன்று, கும்மிடிப்பூண்டியில் உயிரிழந்த குழந்தையின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் பாதுகாப்பற்ற சூழல் திமுக ஆட்சிக் காலத்தில் நிலவியதன் காரணமாகத் தான், மக்கள் மாற்றத்தை விரும்பி, த.வெ.க-வுக்கு வாக்களித்ததாக அவர் கூறினார்.

இருப்பினும், த.வெ.க. அரசின் செயல்பாடுகள் மக்களுக்கு ஏமாற்றமளிப்பது போல் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சட்டம் ஒழுங்கை பராமரிப்பதில் த.வெ.க. அரசு தோல்வியடைந்துள்ளதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் குறை கூறியுள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. சண்முகமும் இந்த பாலியல் படுகொலை சம்பவத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக பாலியல் வன்கொடுமைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவது தொடர்கதையாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இதனை தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை தமிழக அரசும், காவல்துறையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. சண்முகம் அந்த அறிக்கையில் கோரியுள்ளார்.

>>>>>><<<<<<

*சென்னையில் மேற்கொள்ளப்பட்டு வரும் வெள்ளத்தடுப்பு பணிகளை விரைந்து நிறைவேற்றுமாறு நீர்வளத்துறை அமைச்சர் திரு. ஆனந்த், அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.*

*இன்று சென்னையில் இதுதொடர்பாக ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.*

*பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகளையும் உரிய காலத்திற்குள் மேற்கொள்ளுமாறும் அமைச்சர் இக்கூட்டத்தில் வலியுறுத்தினார்.*

>>>>>><<<<<<

*தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் - துரை 32 செகண்ட்ஸ்)*

*இதற்கிடையே, திருப்பூரில் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு பயிற்சி தீயணைப்புத்துறையினர் சார்பில் இன்று நடத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் – சபரிஷ் 29 செகண்ட்ஸ்)*

>>>>>><<<<<<

*மாவட்டச் செய்திகள்*

*கோவை, சாய்பாபா காலனி பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாலப் பணிகளை மாநில அமைச்சர் திரு. சம்பத்குமார் இன்று ஆய்வு செய்தார்.*

>>>>>><<<<<<

*வேலூர் மாவட்டத்தில் முதியோர் வன்கொடுமை ஒழிப்பு விழிப்புணர்வு தினத்தை ஒட்டி, ஆட்சியர் திருமதி. லீலா அலெக்ஸ் தலைமையில் மனிதச்சங்கிலி நடைபெற்றது.*

>>>>>><<<<<<

*காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாநில அரசின் நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி. சினேகா இன்று பயனாளிகளுக்கு வழங்கினார்.*

>>>>>><<<<<<

*உதகையை கட்டமைத்த ஜான் சலீவனின் பிறந்த தினத்தை முன்னிட்டு, நீலகிரி மாவட்ட ஆட்சியர் திருமதி. லஷ்மி பவ்யா தண்ணீரு அன்னாரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.*

>>>>>><<<<<<

*கடலூர் மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்குமாறு ஆட்சியர் திரு. சிபி ஆதித்யா செந்தில்குமார் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.*

>>>>>><<<<<<

*திருப்பத்தூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு. ரவிக்குமார் இன்று வழங்கினார்.*

>>>>>><<<<<<

*விளையாட்டுச் செய்திகள்*

*உலக கோப்பை குத்துச்சண்டை போட்டி சீனாவின் Guiyang-ல் இன்று தொடங்கியது.*

*இந்தியா உட்பட 44 நாடுகளின் 333 பேர் இதில் பங்கேற்றுள்ளனர்.*

*மகளிர் 54 கிலோ எடைப்பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் Poonam, உஸ்பெகிஸ்தானின் Aziza Yokubova-வை 5-0 என்ற புள்ளிக்கணக்கில் வென்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினார்.*

>>>>>><<<<<<

*உலக செஸ் திருவிழாவின் 5வது சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் இனியன் வெற்றிபெற்றார்.*

*மும்பையில் நடைபெற்ற இப்போட்டியில், கூடுதல் புள்ளிகளுடன் அவர் முதலிடத்தில் உள்ளார்.*

>>>>>><<<<<<

*செக்குடியரசில் நடைபெறவுள்ள குத்துச்சண்டை போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.*

*Jadumani Singh, Sachin Siwach, Sakshi, Preeti Pawar உட்பட 12 பேர் இதில் இடம்பெற்றுள்ளனர்.*

>>>>>>END<<<<<<